# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII code of Criminal Procedure)

## IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR

## SESSIONS CASE NO. 210 / 2028

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW8<br>Defence<br>Court |

| | |
|---|---|
| Name | : Thiru. K. Shanmugamsundaram (I.O.) |
| Father / Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 10th day of August, 2026.

**( A1 to A3 are present )**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :</u>

**<u>முதல் விசாரணை :</u>**

நேரம் 13.15 மணி

நான் தற்போது தற்போது T16 நசரத்பேட்டை காவல் நிலையத்தில் சட்டம் ஒழுங்கு பிரிவில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 13-06-2018 ஆம் தேதி சுமார் 11.30 மணிக்கு

ஆய்வாளர் ஜெயச்சந்திரன் என்பவர் பணியில் இருந்தபோது புகார்தாரர் குமார் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று T16 நசரத்பேட்டை காவல் நிலைய குற்ற எண் 549/2018 சட்டப்பிரிவுகள் 294(b), 341, 323, 506(ii) இ.த.ச. Sec. 3 of TNPPDL Act ன் கீழ் வழக்கு பதிவு செய்து மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டார். முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சம்பவயிடம் சென்று சாட்சிகள் நீலகண்டன், மருதய்யா ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்துள்ளார். பார்வை மகஜர் ஏற்கனவே அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மாதிரி வரைபடம் **அ.த.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சம்பவயிடத்தில் உடைந்த கண்ணாடி துண்டகளை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றியுள்ளர். உடைந்த கண்ணாடி துண்டுகள் **அ.சா.பொ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதற்கான படிவம் 91 **அ.த.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் மகஜர் சாட்சிகளை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் எதிரிகளை தேடிவந்தநிலையில் 13–06–2018 அன்று 13.00 மணிக்கு திருமழிசை சந்திப்பில் வைத்து எதிரிகள் பிரசாந்த் மற்றும் பிரபாகர் ஆகியோரை கைது செய்வதற்கான காரணத்தை எடுத்து கூறி கைது செய்துள்ளார். பின்பு எதிரி பிரசாந்த் என்பவர் தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் செல்லதுரை மற்றும் கருத்தபாண்டி ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்துள்ளார். 1ஆம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் சம்பவயிடத்திலிருந்து கருங்கல் மற்றும் உருட்டுக்கட்டை 1ஆம் எதிரி பிரசாந்த் எடுத்து ஆஜர் செய்ததை மகஜரில் கைப்பற்றியுள்ளார். 1ஆம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி ஏற்கனவே அ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. கைப்பற்றுதல் மகஜர் ஏற்கனவே அ.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. கருங்கல் அ.சா.பொ.1 ஆக ஏற்கனேவ குறியீடு செய்யப்பட்டுள்ளது. சவுக்கு உருட்டுக்கட்டை அ.சா.பொ.2 ஆக ஏற்கனேவ குறியீடு செய்யப்பட்டுள்ளது. உருட்டுக்கட்டை மற்றும் கருங்கலுக்கான படிவம் 91

**அ.த.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் கைப்பற்றுதல் மகஜர் சாட்சிகளை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். எதிரிகள் இருவரையும் அன்றேய தினமே நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். பின்னர் வழக்கின் மற்ற சாட்சிகளான ஓம்பால்சிங், பாலசங்கர், கார்த்திக், சண்முக சாமி மற்றும் ராஜி ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் வழக்கில் உடைக்கப்பட்ட லாரியின் இழப்பீட்டை மதிப்பு செய்து சான்றிதழ் வழங்கிய சார்தார்ஜ் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு வழக்கு சொத்தினை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். வழக்கின் எதிரி ஜெயபிரகாஷ் திருவள்ளூர் நீதிமன்றத்தில் முன் ஜாமின் பெற்றதால் அவரை கைது செய்யவில்லை. சம்பவத்தில் ஈடுபட்ட மற்றொருவர் இளஞ்சிறார் தமிழ்செல்வன் மீது JJB ல் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். பின்னர் வழக்கு பிரிவுகளை 294(b), 341, 323, 506(ii) இ.த.ச. Sec. 3 of TNPPDL Act @ 341, 323, 506(ii), 458, 34 of IPC Sec. 3 of TNPPDL Act ஆக பிரிவு மாற்றம் செய்துள்ளார். சட்டப்பரிவு மாற்றல் அறிக்கை **அ.த.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் வழக்கு விசாரணையை முடித்து எதிரிகள் மீது 25-07-2018 ஆம் தேதி இறுது அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>

சம்பவம் 12-06-2018 இரவு 10.00 மணியளவில் நடைபெற்றது என்றால் சரிதான். புகார் 13-06-2018 அன்று காலை 11.30 மணிக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடத்திலிருந்து காவல் நிலையம் சுமார் 4 கிமீ தூரம் என்றால் சரிதான். புகார் சுமார் 12 மணிநேரம் காலதாமதமாக கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். காலதாமதத்திற்கான காரணத்தை முதல் தகவல் அறிக்கை வரிசை எண் 8ல் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். புகார்தாரர் குமார் திருநெல்வேலி மாவட்டத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். புகார்தாரர் தனக்கு நெற்றியில் காயம் ஏற்பட்டதாக கூறியுள்ளார். அதற்கான காயசான்றிதழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். காவல் ஆய்வாளர்

தயார் செய்த பார்வை மகஜர் ஏற்கனவே டைப் செய்யப்பட்டு சாட்சிகளிடம் கையொப்பம் வாங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேலும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சிகள் புகார்தரருக்கு நெருங்கிய நண்பர்கள் என்றால் சரிய்லல. காவல் ஆய்வாளரால் ஏற்கனவே டைப் செய்து வைக்கப்பட்ட மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. கைப்பற்றுதல் மகஜரில் சாட்சிகளாக போடப்பட்டுள்ள செல்லதுரை மற்றும் கருத்தபாண்டி ஆகிய இருவரும் திருநெல்வேலி மாவட்டத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். மேற்படி இருவரும் சம்பந்தப்பட்ட JB Roadways ல் ஓட்டுநராக பணிபுரிந்து வந்தார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கில் சரியான நபர்களை கண்டறியாமல் ஆய்வாளர் தவறான நபர்கள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு இறுதிஅறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur